**அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூா் நகராட்சியில் மாா்ச் மாதம் (09.03.2020) ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகா் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலா் மற்றும் ஆணையாளா் அவா்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீா்மானங்கள்.**

**பொருள்.1**

கூடலூா் நகராட்சியில் கேரள மாநில எல்லையில் உள்ள குமுளியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பணி மனை சா்வே எண்.3041–ல் உள்ள 1.07 ஏக்கா் நிலத்தினை இந்நகராட்சிக்கு வழங்க வேண்டி கடிதம் அனுப்பபட்டது. மேற்படி இடத்திற்கு சந்தை மதிப்பு நிா்ணயம் செய்து அதற்குரிய தொகையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு செலுத்திய பின்னரே இடம் மாற்றம் செய்யப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தினாரால் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களுக்கு சந்தை மதிப்பு நிா்ணயம் செய்திட இந்நகராட்சி மூலம் பிரேரணை அனுப்பப்பட்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களின் 09.01.2020 ஆம் தேதிய கடித ந.க.எண்.33697/2019/ஆ3ல் சந்தை மதிப்பும், 23.12.2019ம் தேதிய செயற்பொறியாளா், பொ.ப.துறை(கட்டடங்கள்), தேனி அவா்களின் கடிதத்தின்படி நிலமதிப்பு நீங்களாக கட்டிடத்தின் மதிப்பு மற்றும் மரங்களின் மதிப்பும் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

**செயற்பொறியாளா் மற்றும் வட்டாட்சியா் அவா்களின் மதிப்பீட்டு விபரம்**

| வ.எண் | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | நில மதிப்பு (107 சென்ட் X 7316.4) | 7,82,855.00 |
| 2 | கட்டிடங்களின் மதிப்பு | 39,25,479.00 |
| 3 | மரங்களின் மதிப்பு | 62,759.00 |
| | மொத்தம் | **47,71,093.00** |

மேற்கண்ட நிலம் மற்றும் கட்டிடங்களின் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திடமிருந்து இந்நகராட்சி பெயரில் வாங்குவதற்காக நிா்வாக அனுமதியும் நில மதிப்பு மொத்த தொகை ரூ.47,71,093.00/-ஐ நகராட்சியின் நிதிநிலையினை கருதி இந்நகராட்சிக்கு மானியமாக வழங்கவும் நகராட்சி நிா்வாக ஆணையா்,சென்னை அவா்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீா்மான எண்.859,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.2**

கூடலூா் நகராட்சியில் 21 வாா்டுகளிலும் உள்ள சிறுமின்விசை பம்புகள், குடிநீா் பயன்பாட்டில் உள்ள மின் மோட்டா்கள் மற்றும் நகராட்சி இலவச கழிவறைகளில் உள்ள மின் மோட்டா்கள், ஆகியவைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.9.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.736/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீா்மான எண்.860,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.3**

கூடலூா் நகராட்சியில் 21 வாா்டுகளிலும் உள்ள பகிா்மான குழாய்கள், பொது குழாய்கள் மற்றும் வால்வுகள், ஆகியவைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.9.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.737/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீா்மான எண்.861,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளையும் எல்லைக்கோடு வாரியாக வரைந்து அதை.shp (Shape File) என்னும் வடிவத்தில் மாற்றி அமைத்து தனித்தனி வார்டுகளாக பிரித்து வரைபடங்கள் தயார் செய்து இரண்டு குறுந்தகட்டில் பதிவேற்றம் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.586/2020/எப்1)**

**அலுவலகக் குறிப்பு : – 1)** மன்றம் அனுமதிக்கலாம்
**2)** மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.862,அனுமதிக்கப்பட்டது**